# பூனையும் நரியும் | தமிழ் கதைகள் | Cat And Fox | Siruvar Kathai

ஒரு மாலை நேரத்தில காட்டுல ஒரு பூனையும் நரியும் உட்கார்ந்து பேசிகிட்டு இருந்துச்சு. "**இந்த வேட்டை நாய்கள் ரொம்ப மோசமானது எனக்கு அதுங்கள பிடிக்காது**", என்று நரி சொல்லிச்சு. "**ஆமா ஆமா எனக்கும் அவங்கள சுத்தமா புடிக்காது**" என்று பூனையும் சொன்னது.

**"அதுங்க ரொம்ப வேகமாக ஓடும். அப்படி வேகமாக ஓடினாலும் அதுங்களால என்ன புடிக்க முடியாது. ஏன்னா, அதுங்க கிட்ட இருந்து தப்பிக்க எனக்கு ஏகப்பட்ட வழிகள் தெரியும்"** என்று நரி சொன்னது. "**வழியா? அப்படி என்ன வழி? எனக்கும் கொஞ்சம் சொல்லு**", என்று அந்தப் பூனை கேட்டது.

அதுக்கு நரி சொல்லிச்சு, "**வழியா ஏகப்பட்ட வழி இருக்கு. நான் கள்ளிச் செடிகளை எகிறி குதித்து ஓடுவேன், புதருக்கு உள்ள போய் ஒளிந்து விடுவேன்**". அப்படி

எல்லாம் சொல்லி தம்பட்டம் அடித்துக்கொண்டு இருந்து அந்த நரி.

**"நிஜமாகவா"** என்று அந்தப் பூனை கேட்டுச்சு. அதுக்கு அந்த நரி சொன்னது, **"ஆமா அதுல ஒண்ணு கூட உனக்கு சொல்லி தர முடியாது, ஏன்னா அது எல்லாமே என்னை மாதிரி புத்திசாலிங்க பண்ணக் கூடியது"** என்று அந்த நரி பெருமையா பேசிக்கிட்டு இருந்து. அதற்கு பூனை **"எனக்கு ஒரே ஒரு வழி தான் தெரியும்"** என்று சோகமாக சொன்னது. இவ்வாறு நரியும் பூனையும் பேசிக்கொண்டிருக்கும்போது வேட்டை நாய்கள் ஓடி வர சத்தம் கேட்டது.

உடனே பூனை **"என்னோட வழியை பயன்படுத்தி நான் என்ன காப்பாத்திக்க போறேன்"** என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த ஒரு மரத்துல ஏறியது. அதன்பின் **"நீ எப்படி உன்னை காப்பாத்திக்க போறேன்னு நானும் பாக்குறேன்"** என்று அந்த நரி கிட்ட பூனை சொன்னது.

அந்த நரி பூனையிடம் சொன்ன எல்லா வழிகளையும் பயன்படுத்தி பாத்திச்சு ஆனா

அதால அந்த வேட்டை நாய்கள் கிட்ட இருந்து தப்பிக்க முடியல. வேட்டை நாய்கள் அந்த நரியை கொன்று சாப்பிட்டுச்சாம்.

நீதி : தேவையில்லாத பல விஷயங்களை கத்துக்குறது விட, முக்கியமான ஒரு விஷயத்தை கத்துகிறது எப்பவுமே நல்லது.

---

மேலும், இதை போன்ற கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

**https://www.tamilkathaigal.com/**

---

ஆங்கில கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

**https://www.shortstoryenglish.com/**